பக்கங்கள் 24+3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | தை 22 செவ்வாய்க்கிழமை 04.02.2025 | அதிர்வு 187



‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




## ‘பெப்ரவரி 4’ தமிழினத்தின் கரிநாள்:

# கிளிநொச்சியில் இன்று மாபெரும் ஆர்ப்பாட்டம்!



(எஸ்.நிதர்ஷன்)

இலங்கையின் சுதந்திர நாளான இன்று (04.02.2025) “தமிழர் தாயகத்தின் கரிநாள்” எனப் பிரகடனப்படுத்தி வடக்கு - கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் ஏற்பாட்டில் தமிழினப் படுகொலைக்கு நீதி கோரியும், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி கோரியும், அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியும் கிளிநொச்சியில் மாபெரும் கறுப்புக் கொடி போராட்டம் நடைபெற்றது.

02 ▶



# கிளிநொச்சியில் இன்று மாபெரும் ஆர்ப்பாட்டம்!

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், அரசியல் கைதிகளின் உறவுகள், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், வர்த்தகர்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

இந்நிலையில், போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பின்வரும் விடயங்களைக் கோரிக்கைகளாக முன்வைத்தனர்.

1. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு சர்வதேச நீதி வேண்டும்.

2. தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

3. பௌத்த மயமாக்கல் உடனே நிறுத்தப்பட வேண்டும்.

4. தமிழர் தாயக பிரதேசத்தில் தொடர்ச்சியாக நடந்து வரும் நில அபகரிப்பு உடனே நிறுத்தப்பட வேண்டும்.

5. தாயக வளத்தை அபகரிப்பது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

6. தமிழர் தாயக பிரதேசத்தில் இருந்து இராணுவம் உடனடியாக வெளியேற்றப்பட வேண்டும்.

7. தமிழின படுகொலைக்கு சர்வதேச நீதி விசாரணை வேண்டும்

8. சிவில் செயற்பாட்டாளர்கள் மீதான அச்சுறுத்துதல்கள் நிறுத்தப்பட வேண்டும்.

9. ஊடகவியலாளர்களை அச்சுறுத்துவது நிறுத்தப்பட வேண்டும்.

10 எமது நிலம் எமக்கு வேண்டும்.

11. தாயகம், தேசியம், அரசியல் சுயநிரணயம் என்பன எமது உரிமைகள். அவற்றை உடனே அங்கீகரிக்க வேண்டும்.

12. வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம் என்பது அங்கீகரிக்கப்பட வேண்டும்.

13 சர்வதேசம் வட்டுக் கோட்டை தீர்மானத்தை அங்கீகரிக்க வேண்டும்.

14 எமது தலைவிதியை நாமே தீர்மானிக்க சர்வதேச நியமங்களுக்கு அமைய எமது தாயக பிரதேசத்தில் பொது வாக்கெடுப்பு நடத்துமாறு சர்வதேசத்தைக் கோருகின்றோம்.


















# கிளிநொச்சியில் இன்று மாபெரும் ஆர்ப்பாட்டம்!

















# கிளிநொச்சியில் இன்று மாபெரும் ஆர்ப்பாட்டம்!
































# நல்லூரிலும் போராட்டம்

**(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)**

இலங்கையின் 77 ஆவது சுதந்திர தினத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று யாழ்ப்பாணத்தில் கறுப்புக்கொடி போராட்டம் நடைபெற்றது.

நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபிக்கு முன்பாக பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் இயக்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் சிவகுரு ஆதீனத்தில் ஆதீன குரு முதல்வர் தவத்திரு. வேலன் சுவாமிகள் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.



# வவுனியா சிறையில் இருந்து இருவர் விடுதலை

**(கி.வசந்தன்)**

இலங்கையின் 77 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இருவர் விடுவிக்கப்பட்டனர்.

77 ஆவது சுதந்திர தினத்தையடுத்து ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் நாடு பூராகவும் சிறைக் கைதிகள் இன்று விடுதலை செய்யப்பட்டனர்.

சிறு குற்றங்களுக்காகக் குறுகிய கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டனர்.

அவர்கள் செலுத்த வேண்டிய அபராதங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதுடன், சிறு குற்றங்களுக்காகக் கைதாகி தண்டனையின் பாதியை நிறைவு செய்த கைதிகளுமே இவ்வாறு பொது மன்னிப்பு வழங்கி விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் இருந்து இரண்டு கைதிகள் விடுவிக்கப்பட்டனர். கைதிகளை விடுவிக்கும் நிகழ்வில் வவுனியா சிறைச்சாலை அத்தியட்சகர் ரங்கன பெரேரா, பிரதான சிறைச்சாலை பிரதானி உட்பட சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருந்தனர்.




# யாழ். பல்கலையில் மாணவர்கள் கறுப்புக் கொடியேற்றி போராட்டம்

**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் பிரதான கொடிக் கம்பத்தில் பறந்த தேசியக் கொடி மாணவர்களால் இன்று இறக்கப்பட்டு கறுப்புக் கொடியேற்றப்பட்டது.

அதேவேளை, பல்கலைக்கழகச் சூழலில் கறுப்புக் கொடிகளும் பறக்க விடப்பட்டிருந்தன.

சுதந்திர தினத்தைக் கரிநாளாகப் பிரகடனப்படுத்தி யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ். பல்கலைக்கழக பிரதான வாயிலின் முன்பாக இன்று முற்பகல் 11 மணியளவில் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.











# சுதந்திரப் போராட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டிய நிலையில் நாம்

## ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு



சுதந்திரப் போராட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டியுள்ளது என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் இன்று நடைபெற்ற இலங்கையின் 77 ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஆற்றிய முழுமையான உரை வருமாறு:-

“இம்முறை நாம் சிறப்பான சுதந்திர தினத்தை கொண்டாடுகிறோம். கடந்த காலத்தை பார்த்து சுதந்திர தினத்தை கொண்டாடாமல், இம்முறை எதிர் காலத்தை நோக்கியதாகவும், வடக்கு, தெற்கு, கிழக்கு மற்றும் நாட்டின் மத்தியிலும் வாழும் மக்கள் எதிர்கால வளமான இலங்கை நாடு, நவீன இலங்கை தேசம் ஒன்றிற்காக கனவு காணும் தருணத்திலேயே நாம் இன்று சுதந்திரத்தை கொண்டாடுகிறோம்.

1948 பெப்ரவரி 4 நமக்கான முடிவுகளை நாமே எடுப்பதற்கான அரசியல் சுதந்திரம் நம் நாட்டுக்கு கிடைத்தது. அந்த சுதந்திரம் வரையறுக்கப்பட்டதாக இருந்தாலும், அது முக்கியமானது. அதுவே நமது அரசியல் சுயாதீன தன்மையை பெற்ற வரலாற்றின் முதல் தருணம். 1505 முதல் பகுதியளவில் மேற்கத்தேய ஏகாதிபத்தியவாதிகளுக்கு அடிபணிந்த இந்த நாடு 1815 இல் பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு முழுமையாக அடிபணிந்தது. அதிலிருந்து விடுபட்டு இன்றைக்கு 77 ஆண்டுகளுக்கு முன்பு இந்து சமுத்திரத்தினால் சூழப்பட்ட இந்நாடு, சுயாதீனமான நாடாக எழுந்து நிற்பதற்குத் தேவையான அரசியல் நியதிகளை நிறைவேற்ற ஆரம்பித்ததும் இவ்வாறானதொரு நாளிலாகும். எனவே இது நாம் கொண்டாட வேண்டிய நாளாகும்.

இந்நாளை நனவாக்க தம் உயிர் தியாகம் செய்த அனைத்து வீரர்களுக்கும் அஞ்சலி செலுத்தும் நாள் இன்று. சுதந்திரத்தை முழுமையாகப் பெறுவதற்காக 1948ஆம் ஆண்டுக்குப் பின்பும் வீரமிக்க மக்கள் நமது சுதந்திரத்துக்காக மேடுபள்ளம் நிறைந்த பாதையில் பயணித்தனர்.

கிரீடத்திடமிருந்து முழு அரசியல் சுதந்திரம் பெற்ற1972 ஆம் ஆண்டை கடந்து தொடர்ச்சியாக 77ஆவது சுதந்திரத்தை கொண்டாடும் இந்தத் தருணம் வரையில் நீண்ட பயணமாக வந்திருக்கிறோம். அந்தப் பயணத்தில்,நாம் அறியாத, நமது சுதந்திரத்துக்காக உயிர் தியாகம் செய்த வீரர்களின் இரத்தத்தினாலும், வியர்வையினாலும் இன்று வரை பயணித்திருக்கிறோம். அவர்கள் அனைவருக்கும் இந்த தருணத்தில் நமது கௌரவம் உரித்தாகும்.

இன்று, இந்த நாட்டில் மக்களின் வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியாக, இந்த சுதந்திர சதுக்கத்தில் இந்த பெருமைமிக்க தேசியக் கொடியின் முன், சுதந்திரத்தின் எதிர்கால எதிர்பார்ப்புக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வரலாற்றுச் சுமையைத் ஏற்றுக்கொண்ட உங்கள் சகோதரனாக நான் நிற்கிறேன். என்னைப் போன்றே இந்த சுமையை தாங்கிக் கொண்டு இந்த நேரத்தில் நீங்களும் என்னுடனும் என்னைச் சுற்றியும் நிற்கிறீர்கள் என்று நம்புகிறேன். நமது பொருளாதார சுதந்திரத்திற்காக, நமது சமூக, கலாசார சுதந்திரத்திற்காக, சுருக்கமாகக் கூறினால்,

நவீன பிரஜைகளாக இந்த நாட்டில் பெருமையுடன் வாழத் தேவையான சுதந்திரத்தை உருவாக்குவதற்காக நாம் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும்.

நீண்ட காலமாக காலனித்துவத்துக்கு அடிபணிந்தவர்களாக எம்மை பிரித்து ஆண்ட இன வேறுபாடுகள், மத வேறுபாடுகள், ஜாதி வேறுபாடுகள் மட்டுமன்றி, அரசியல் பிரதிநிதிகள் மற்றும் மக்கள் இடையே, நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் ஊழியர்களிடையே, பயணிகள் மற்றும் பொதுப் போக்குவரத்து நடத்துபவர்களிடையே, அரச ஊழியர்கள் மற்றும் தங்கள் தேவைகளை நிறைவேற்ற வருபவர்களிடையே, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிடையே வேரூன்றியிருக்கும் தவறான எண்ணங்களை கழுவி அகற்றி இந்த சமூகத்தை தூய்மைப்படுத்தப்பட வேண்டும். அதே போல், நவீன உலகத்திற்கான மனித மாண்பு, அன்பு, கருணை என்பவற்றை மனித தொடர்பாடலின் அடிப்படை என்பதை நமக்கு நாமே வலியுறுத்த வேண்டும்.

மேலும், இந்த நாட்டின் பிரஜைகள் என்ற வகையில் ஒருவருக்குக் கிடைக்கும் கௌரவம் மற்றும் அன்பு என்பன அங்கவீனம், முதுமை, நோய் அல்லது அத்தகைய எந்தவொரு இயலாமை காரணமாகவும் மட்டுப்படுதற்கு இடமளிக்கக்கூடாது. அப்போது மட்டுமே, காலனித்துவ யுகத்திலிருந்து விடுபட்டு

தொடர்ச்சி▼

# சுதந்திரப் போராட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டிய நிலையில் நாம்

தொடர்ச்சி▲

77 ஆண்டுகள் கடந்துவிட்ட ஒரு நாடு என்ற வகையில், சுதந்திரம் குறித்து புதிதாக சிந்திக்க முடியும்.

இதன் காரணமாக நாங்கள் அனைவரும் நாட்டிற்கான முழுமையான பொருளாதார, சமூக மற்றும் கலாசார சுதந்திரத்தை வென்றெடுக்கும் போராட்ட களத்தின் போராட்டக்காரர்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இந்த தாய்நாட்டிற்காக நாம் அனைவரும் ஒற்றுமையாக சுதந்திரப் போராட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டியுள்ளது.

இந்த பணியில், நம் தேசத்திற்கு உணவை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கும், மீனவர்களுக்கும் பங்குள்ளது. நமது தேசத்திற்கான அறிவை உருவாக்கி எதிர்கால சந்ததியினரை அறிவினால் பூரணப்படுத்தும் ஆசிரியர்களின் வகிபாகமும் உள்ளது. நமது தேசத்தின் ஆரோக்கியத்தை பாதுகாக்கும் சுகாதாரப் பணியாளர்களாக உங்களுக்கும் பங்கு உள்ளது. நமது பொது மக்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொலிஸ்மற்றும் பாதுகாப்புப் படைகள் என்ற வகையில் உங்களுக்கும் பங்குள்ளது.

நம் நாட்டில் வலுவான உற்பத்திப் பொருளாதாரத்தை உருவாக்கும், நம் நாட்டை தொழில்மயமாக்கலை நோக்கி இட்டுச் செல்லும், நம் நாட்டின் சேவைப் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதில் இந்த அனைவருக்கும் முக்கியமான வகிபாகம் உள்ளது. ஆடைத் தொழிற்சாலை தொழிலாளர்கள் முதல் மலையகத்தில் தேயிலை பறிக்கும் பெண்கள் வரையிலும், தொலைதூர நாடுகளில் நமக்காக பாடுபடுவோர் வரையிலும், தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் நம் நாட்டை உயர்த்த பாடுபடும், சுற்றுலாத் துறையின் மூலம் நம் நாட்டை உயர்த்த பாடுபடும் உங்கள் அனைவருக்கும் அதில் வகிபாகமொன்று உண்டு.

உலகப் பொருளாதார அமைப்பில் நலிவடையாமல், அதன் ஒவ்வொரு அசைவிலும் நசுக்கப்படும் அடிபணிந்தவர்களாக அன்றி, பொருளாதாரத்துக்குள் நமது சுதந்திரத்தை அடைய வேண்டுமெனில் அனைவரும் ஒன்றுபட்டு இந்த தாய்நாட்டிற்காக அர்ப்பணிக்க வேண்டியுள்ளது. அந்த பொருளாதார சுதந்திரத்திற்கான நமது



போராட்டத்தில் நமது சமூக மற்றும் கலாசார சுதந்திரத்தை ஒருபோதும் நாம் இரண்டாம் பட்சமாக பார்க்க நாம் தயாரில்லை.

எனவே, கலைஞர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் கல்வியியளர்கள் என்ற வகையில் வெறுப்பு மற்றும் கோபத்தால் மாசுபடுத்தப்பட்ட எமது தேசத்தின் உயிர்ப்பை தூய்மைப்படுத்தி குணப்படுத்த வேண்டிய தவிர்க்க முடியாத பொறுப்பு உங்களுக்கு உள்ளது. அதில் மதத் தலைவர்களுக்கு பாரிய பொறுப்புள்ளது. மேலும், இந்த நாட்டின் வருங்கால சந்ததியினரை வளர்த்தெடுக்கும் அன்பான தாய்மார் அன்பான தந்தையர் என்ற வகையில் உங்களுக்கு சிறப்பான பணி உண்டு.

மேலும், நாளை இந்த நாட்டைக் பொறுப்பேற்கத் தயாராகும் கல்வி பயிலும் பிள்ளைகள் என்ற வகையில் உங்களுக்கும் தனித்துவமான பங்கு உள்ளது. இதை நாட்டை அதிகமாக நேசிக்கும் மக்களின் உயிர் தியாகம், வியர்வை, இரத்தம் கண்ணீரால் இந்த நாட்டை எதிர்காலத்திற்கு இட்டுச் செல்லும் பொறுப்பு எம்மிடம் ஒப்படைக்கப்பட்டது போன்று எதிர்காலத்தில் அந்த கௌரவப் பொறுப்பை உங்களிடம் ஒப்படைப்போம்.

ஆனால் இன்று, 2025 பெப்ரவரி 4 ஆம் திகதி 77 ஆண்டுகளுக்குப் பிறகு காலனித்துவத்திலிருந்து சுதந்திரம் பெற்று தேசிய சுதந்திரத்தை கொண்டாடும் உங்களுக்கு நான் ஒன்றை உறுதியளிக்க வேண்டும். நாங்கள் உங்களிடம் ஒப்படைக்கப் போகும் நாடு வரலாற்றால் எங்களிடம் ஒப்படைக்கப்பட்ட நாடாக அன்றி, நீங்கள் உலக பிரஜையாக வாழ விரும்பும், பிரஜை என்ற உங்கள் கௌரவத்தை மதிப்பளிக்கும், மேம்பட்ட கலாசாரத்துடன் கூடிய ஒரு நாடாக அமையும். மேலும், மனித நாகரிகம் இதுவரை அடைந்துள்ள அறிவியல், தொழில்நுட்ப மற்றும் அறிவுசார் சாதனைகள், இந்த இலங்கை நாட்டுப் பிரஜையாக அனுபவிப்பதற்கான உங்களது உரிமையை உறுதிப்படுத்தும் நாடாக அமையும்.

சரித்திரம் நமக்கு வழங்கியிருக்கும் இந்த மாபெரும் வாய்ப்பை நழுவ விட எமக்கு எந்தத் தார்மீக உரிமையும் இல்லை என்பதை இன்று உங்கள் முன் உறுதியாகச் இவ்வாறு சொல்கிறேன். நாம் அவ்வாறு செய்யவில்லைஎன்பதற்குஎதிர்காலம்சாட்சியமளிக்கும். மேலும், நாங்கள் உங்களிடம் ஒப்படைக்கும் இந்த அன்பான தாய் நாட்டை நீங்கள் எங்களை விட அதிக அன்புடனும் ஆற்றலுடனும் எதிர் காலத்திற்கு எடுத்துச் செல்வீர்கள் என்று நான் நம்புகிறேன்.

இந்த பூமியில் பிறந்த மனிதர்கள் என்ற வகையில், இந்த உலகத்தை உயர்ந்த மனித நேயம் மிக்க இடமாக மாற்றும் பொறுப்பு நமக்கு உள்ளது. அந்த உயர்ந்த மனித நேயத்தை அனைத்துமக்களும்சமமாகஉள்வாங்குவதற்கான வாய்ப்புகளை வழங்க வேண்டும். சுதந்திரத்திற்கான போராட்டம் இந்த பரந்த நோக்கங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது.

எனவே, சுதந்திரத்தின் கனவை ஒன்றாகப் காண்போம். அந்தக் கனவை ஒன்றாக நனவாக்கிகொள்வோம்.

ஒருவேளை நீங்களும் நானும், நாம் அனைவரும் இணைந்து பயணித்துக் கொண்டிருக்கும், சுதந்திரம் மற்றும் ஜனநாயகம் தொடர்பிலான நவீன உலக அரசியலில் அழியாத முன்னுதாரணமாக நமது தாய்நாட்டை, இந்த இலங்கை நாட்டை மாற்றியமைப்பதற்கான பயணமாக இருக்கலாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நாம் இந்த உலகின் செல்வந்த நாடாக மாற முடியாது என்றாலும், நாம் முயற்சி செய்தால் இந்த உலகத்தில் வளமான தேசிய உயிர்ப்பை தாங்கிக் கொண்டிருக்கும் சமத்துவம் மற்றும் சுதந்திரத்திற்கான முன்னுதாரணமான நாடாக நாம் மாறலாம்." – என்றார்.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## உண்மை வெளிவருமா?

ஈஸ்டர் ஞாயிறு தொடர்க் குண்டு தாக்குதல்கள் நடைபெற்று ஐந்து ஆண்டுகள் கடந்து விட்டன. ஆறாவது ஆண்டின் பூர்த்தியை நெருங்கிக் கொண்டிருக்கின்றோம்.

இந்தக் குண்டுத் தாக்குதல்களின் சூத்திரதாரிகள் தொடர்பில் முன்னைய அரசுகள் காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்ற ஆட்சேபனை, ஆதங்கம், சீற்றம் பலதரப்புகளுக்கும் நீடிக்கையில், இப்போது புதிதாக ஆட்சிக்கு வந்திருக்கும் தேசிய மக்கள் சக்தி தேர்தலுக்கு முன்னர்தான் கொடுத்த வாக்குறுதிப்படி இந்தக் குண்டுத் தாக்குதல் விவகாரத்தின் உண்மை விடயங்களை அம்பலப்படுத்துவதற்கு முயற்சித்து வருவதாகத் தோன்றுகின்றது.

சுவிட்ஸர்லாந்தில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள அஸாத் மௌலானா என்பவர் இந்தக் குண்டுத் தாக்குதல் தொடர்பில் பரபரப்பு தகவல்களை ‘சனல் - 4’ தொலைக்காட்சி ஊடாக வெளியிட்டு புதிய சர்ச்சையைக் கிளப்பியிருந்தார்.

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பிள்ளையான் என அழைக்கப்படும் சிவனேசத்துரை சந்திரகாந்தன் மற்றும் இலங்கையின் புலனாய்வுத் துறையின் பொறுப்பாளராக இருந்த சுரேஷ் சாலே ஆகியோருக்கும் இந்தத் தொடர் குண்டுத் தாக்குதல்களுக்கும் தொடர்பு இருப்பதாக பல விடயங்களை குறிப்பிட்டு அவர் அந்த தொலைக்காட்சி பேட்டி மூலம் சர்ச்சையைக் கிளப்பி இருந்தார்.

இந்த இருவரும் சிக்கினால் அவர்களோடு சேர்ந்து இந்த விடயத்தில் முன்னாள் ஜனாதிபதியும் முன்னாள் பாதுகாப்பு செயலாளருமான கோட்டாபய ராஜபக்ஷவும் சிக்கக் கூடிய வாய்ப்பு இருப்பதாக சில வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன.

இந்தப் பின்புலத்தில்தான் சுவிட்ஸர்லாந்தில் அரசியல் தஞ்சம் பெற்றுள்ள அஸாத் மௌலானா நாடு திரும்பி விசாரணைகளுக்கு ஒத்துழைக்கும் வகையில் சாட்சியம் அளிக்க முன் வந்திருக்கிறார் என்று செய்திகள் வெளியாகி இருக்கின்றன.


ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் நடந்த சமயத்திலும் அதற்கு முன்னரும் பிள்ளையானின் உதவியாளராகச் செயல்பட்ட அஸாத் மௌலானாவின் சாட்சியம் இந்த விடயத்தில் பல உண்மைகளை வெளிக் கொணர உதவக் கூடும் என்ற கருத்து பல மட்டங்களிலும் உண்டு.

இதற்கிடையில் அஸாத் மௌலானாவின் இரண்டாவது திருமணம் தொடர்பில் அவரது இரண்டாவது மனைவி மூலம் சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய, அஸாத் மௌலானா இல்லாமல் கல்முனை நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், அஸாத் மௌலானாவுக்கு எதிராக கைது உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. அஸாத் மௌலானா மேற்படி ஈஸ்டர் குண்டு தாக்குதல் விசாரணைகளுக்காக சாட்சியம் அளிக்க கொழும்பு விமான நிலையத்தில் வந்திறங்கினால் அவரை விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யக் கூடியதாக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

பிள்ளையான் தரப்பின் தூண்டலினாலேயே அஸாத் மௌலானாவின் இரண்டாவது மனைவி மூலம் இந்த வழக்குத் தொடரப்பட்டதாக ஒரு குற்றச்சாட்டு உண்டு.

ஆயினும் இந்த வழக்கில் அஸாத் மௌலானாவுக்கு எதிரான கைது உத்தரவு இப்போது விலக்கப்பட்டிருக்கின்றது. அந்த கைது உத்தரவை விலக்கும் விடயம் தொடர்பான நீதிமன்ற பரிசீலனையின்போது அதனை பொலிஸ் தரப்பு ஆட்சேபிக்காமல் விட்டமை அஸாத் மௌலானாவை இலங்கைக்கு வர வைத்து, அவர் மூலம் ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் விடயங்களை அம்பலப்படுத்துவதே என்று சட்ட வட்டாரங்கள் கருதுகின்றன.

இந்தப் பின்புலத்தில் அஸாத் மௌலானாவின் வருகையோடு பல விடயங்கள் வெளிச்சத்துக்கு வரலாம் என்ற நம்பிக்கை சட்ட வட்டாரங்களில் தோன்றியிருப்பதையும் மறுப்பதற்கு இல்லை.


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA



# தென் கொரிய குடியரசின் தூதர் கடற்படைத் தளபதியுடன் சந்திப்பு

இலங்கைக்கான தென் கொரிய குடியரசின் தூதர் மியோன் லீ, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் காஞ்சன பனாகொடவை நேற்று (03) கடற்படைத் தலைமையகத்தில் சந்தித்தார்.

இலங்கை கடற்படையின் 26 ஆவது தளபதியாகப் பொறுப்பேற்ற வைஸ் அட்மிரல் காஞ்சன பனாகொடவுக்கு தனது வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

பின்னர், இருதரப்பு நலன்கள் குறித்த விடயங்கள் தொடர்பில் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டார்.

அத்துடன், இரு நாடுகளுக்கும் இடையிலான வலுவான உறவுகளை நினைவு கூர்ந்தனர்.







# திருமலை மடத்தடி கிருஷ்ணன் கும்பாபிஷேகம்!

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மடத்தடி ஸ்ரீ ருக்மணி, ஸ்ரீசத்தியபாமா சமேத ஸ்ரீ கிருஷ்ண பகவான் ஆலய மகாகும்பாபிஷேகம் நேற்று (3) நடைபெற்றது.

உற்சவ மூர்த்திக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும், ராஜகோபுர கலசங்களுக்கும் சுபமூகூர்த்த வேளையில் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது.

1836 ஆம் ஆண்டு சிறு ஆலயமாக அமைக்கப்பட்டு, கடந்த 189 ஆண்டுகளை கடந்துள்ள திருகோணமலையின் முதலாவது கிருஷ்ணர் ஆலயமான இந்த ஆலயத்தில் கடந்த 7 ஆண்டுகளுக்கு முன்னர் பாலஸ்தாபனம் நடத்தப்பட்டு கும்பாபிஷேக பணிகள் ஆரம்பிக்கபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# பாடசாலை மாணவர்களுக்கான மத்தியஸ்த திட்டச் செயலமர்வு

(எஸ்.கீதபொன்கலன்)

பாடசாலை மாணவர்களுக்கான மத்தியஸ்த நிகழ்ச்சித் திட்டச் செயலமர்வு நீதி, சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு அமைச்சின் மத்தியஸ்த ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் எஸ்.ஈ.டீ.ஆர். நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் சம்பூர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம். முபாரக்கின் வழிகாட்டலிலும், பிரதேச செயலக மத்தியஸ்த அபிவிருத்தி உத்தியோகத்தர் எ.எஸ்.எம். நிஜாமின் ஒருங்கிணைப்பிலும் இந்த நிகழ்வு நடைபெற்றது.



இதில் வளவாளராக திருமதி. ர.ரஹீமா பானு மற்றும் திருமதி. என.எப்.நஸ்ரின் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தப் பயிற்சிசட செயலமர்வைத் தொடர்ந்து, மாணவர்கள் பாடசாலைக்குள் ஏற்படும் பிணக்குகளை தாமே தீர்த்துக் கொள்வதற்கான பிரயோக ரீதியான அறிவைப் பெற்றுக் கொண்டனர்.

எதிர்காலத்தில் பாடசாலையில் ஏற்படும் பிணக்குகளைத் தீர்ப்பதற்கான மாணவ மத்தியஸ்தர்களாக இருப்பது தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டது.






### போக்குவரத்து வசதி இல்லாமல் கல்வியை இழந்திருந்த

# கல்லரிப்பு பழங்குடி மாணவர்களுக்கு வள்ளுவம் அமைப்பு வாகனசேவை!

(வி.ரி.சகாதேவராஜா)

போக்குவரத்து வசதி இல்லாமல் கல்வியை இழந்திருந்த கல்லரிப்பு பழங்குடி மாணவர்களுக்கு வள்ளுவம் அமைப்பு வாகன சேவையை வழங்கி முன்னுதாரணமாக விளங்குகிறது.

வாகரை பிரதேசத்தில் உள்ள வெருகல் கல்லரிப்பு பழங்குடிக் கிராம மாணவர்களுக்கு கல்வி வசதி வழங்க வள்ளுவம் அமைப்பு இந்த வாகன வசதியை வழங்கியுள்ளது.

கல்லரிப்பு பழங்குடி கிராமத்தில் பாடசாலை இல்லை. மூன்று கிலோ மீற்றர் தொலைவில் மாவடிச்சேனை மற்றும் வெருகல் பாடசாலைகள் உள்ளன. இந்த மாணவர்கள் அங்கு சென்று தான் கல்வி பயில வேண்டிய நிலை உள்ளது. ஆனால் அவர்கள் சென்றுவர போக்குவரத்து வசதி இல்லை. கால்நடையாகவே சென்று வர வேண்டிய அவலநிலை இருந்தது.

அதனால் அங்குள்ள மாணவர்கள் மாதக்கணக்கில் பாடசாலைக்குச் செல்லாமல் இருந்தனர்.

இந்த அவலநிலையை உணர்ந்த வள்ளுவம் அமைப்பு, தினமும் காலையில் அந்த மாணவர்களை மாவடிச்சேனை பாடசாலைக்கு கொண்டு செல்ல வாகன வசதியை வழங்கியுள்ளது. அதேபோன்று பாடசாலை முடிந்ததும் அவர்களைக் கிராமத்துக்குக் கொண்டு செல்லவும் அந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கனடாவைச் சேர்ந்த வள்ளுவம் அமைப்பின் பணிப்பாளர் ஜெஸ்லனட் ராஜன் செல்வநாயகம் இதற்கான ஏற்பாட்டை நேரடியாக மேற்கொண்டிருந்தார்.

பல மாத காலமாக பாடசாலை செல்லாதிருந்த அந்த மாணவர்களுக்கு வள்ளுவம் அமைப்பு ஏற்படுத்தி கொடுத்த இந்த வாகன வசதி பெரும் உதவியாக அமைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





# வடமராட்சி கிழக்கு உடுத்துறையில் ‘கிளீன் ஸ்ரீ லங்கா’ செயற்றிட்டம்!

செழுமையான தேசம் அழகான வாழ்வு என்ற தூர நோக்கை அடையும் விதத்தில் “கிளீன் ஸ்ரீலங்கா” செயற்றிட்டத்தில் வடமராட்சி கிழக்கு உடுத்துறையில் கடற்கரை பிரதேசங்களைச் சுத்தம் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

உடுத்துறைக் கடற்கரை பிரதேசத்தைச் சுற்றியுள்ள பகுதிகளை மருதங்கேணி பொலிஸார் உடுத்துறை 10 ஆம் வட்டாரம் கடற்தொழிலாளர் சங்கத்துடன் இணைந்து துப்புரவு பணியை மேற்கொண்டனர்.

இந்த நிகழ்வில் மருதங்கேணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி யூ.எம்.ஜே.வி.கே.அமரசிங்க,உடுத்துறை கடற்தொழிலாளர் சங்க தலைவர் கணேஸ்வரன், வடமராட்சி கிழக்கு சமாச தலைவர் தங்கரூபன், வத்திராயன் கிராம அபிவிருத்தி சங்க தலைவர் செல்வன், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# இலங்கையின் 77 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள்!



## பருத்தித்துறை நகரசபையில்...

இலங்கையின் 7ஆவது சுதந்திரதினம் இன்று செவ்வாய்க்கிழமை தேசியக் கொடியேற்றலுடன் பருத்தித்துறை நகரசபையில் ஆரம்பமாகி இடம்பெற்றது.

சபைச் செயலாளர் திருமதி தாரணி கஜரூபன் தேசியக் கொடியை ஏற்றி வைக்க, தேசியகீதம் இசைக்கப்பட்டது. தொடர்ந்து மரம் நடுகை இடம்பெற்றது. சபைக் கணக்காளர் திருமதி யோ. ராதை மரக்கன்றை நட்டி வைத்து மரம் நடுகையை ஆரம்பித்து வைத்தார்.







## அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில்...

(நவாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் தீகவாபி பிரிவர சைத்திய போதிபல சந்தானந்த ஹிமியின் தலைமையில் இலங்கையின் 77 ஆவது சுதந்திர தினம் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பி.ரி.எம். இர்பான் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

அதனைத் தொடர்ந்து தீகவாபி முன்பள்ளி பாலர்களின் விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தீகவாபி பிரிவர சைத்திய போதிபல சந்தானந்த ஹிமி, ஏ.எம். சிமியோன் அப்புஹாமி மற்றும் செயலகத்தினர், கிராம சேவகர்கள், சமுர்த்தி அலுவலர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



# இலங்கையின் 77 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள்!



## ஓட்டமாவடி பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில்...

(நூருல் ஹுதா உமர்)

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 77 ஆவது சுதந்திர தின நிகழ்வு இன்று ஓட்டமாவடி பலநோக்கு கூட்டுறவு சங்க வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சங்கத்தின் தலைவர் மௌலவி எம்.எம்.எஸ்.ஹாறூன் ஸஹ்வியின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த பண்டார பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

வாழைச்சேனை கடதாசி ஆலை விஷேட அதிரடிப் படை பிரிவின் உப அதிகாரி மற்றும் கூட்டுறவு சங்கத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோத்தர் ஏ.எம்.எம் பாறூக், சங்க உத்தியோகத்தர்கள், முன்பள்ளி சிறார்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



பிரதம அதிதியால் தேசியக் கொடி ஏற்றி வைக்க பட்டதைத் தொடர்ந்து மௌலவி எம்.எம்.எஸ்.ஹாறூன் உரை நிகழ்த்தினர்.

கூட்டுறவு சங்க உத்தியோத்தர்களால் பாதசாரிகளுக்கு குடிபானம் வழங்கப்பட்டது.



## தம்பலகாமம் பிரதேச செயலகத்தில்...

(ஹஸ்பர் ஏ. எச்.)

தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் சுதந்திர தின நிகழ்வு தம்பலகாமம் பிரதேச செயலக வளாகத்தில் இன்று (04) இடம் பெற்றது.

தேசிய மறுமலர்ச்சிக்காக அனைவரும் அணி திரள்வோம் எனும் தொனிப் பொருளின் கீழ் கொண்டாடப்பட்டு வரும் சுதந்திர தின நிகழ்வுக்கு அமைய தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெயகௌரி ஸ்ரீபதி தேசிய கொடி ஏற்றி வைக்கத் தேசிய கீதம் இயற்றப்பட்டது.

உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தனால் சுதந்திர தின உரை நிகழ்த்தப்பட்டது. இதனை தொடர்ந்து குறித்த பிரதேச செயலக வளாகத்தில் மரநடுகையும் இடம் பெற்றது.





# இலங்கையின் 77 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள்!

## வடமராட்சி வடக்கு பிரதேச செயலகம்...





இலங்கையின் 77 ஆவது சுதந்திர தின விழா பருத்தித்துறை வடமராட்சி வடக்கு பிரதேச செயலக முன்றலில் பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன் தலைமையில் இடம்பெற்றது.

பிரதேச செயலரால் தேசிய கொடி ஏற்றப்பட்டு தேசிய கீதம் இசைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பிரதேச செயலாளரின் சுதந்திர தின உரையும் சிரமதான நிகழ்வும் இடம்பெற்றன.

## தென் எருவில்பற்று பிரதேச செயலகம்...





**(வி.ரி.சகாதேவராஜா)**

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 77 ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வுகள் இன்று பிரதேச செயலாளர் உ. உதயஸ்ரீதர் தலைமையில் பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்றது.

## திருமலை மாவட்ட செயலகத்தில்...




**(அபு அலா, எஸ்.எம்.முபீன்)**

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 77 ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வு இன்று (04) திருகோணமலை மாவட்ட செயலக வளாகத்தில் மாவட்ட அரச அதிபர் டபிள்யூ. ஜி. எம். ஹேமந்த குமார தலைமையில் இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அக்மீமன கமகே ரொஷான் பிரியசஞ்சனவால் இதன்போது தேசியக் கொடி ஏற்றி வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

“தேசிய மறுமலர்ச்சிக்கு தயாராகுவோம்” என்ற தொனிப்பொருளின் கீழ் இம்முறை சுதந்திர தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இதன்போது மாவட்ட செயலக வளாகத்தில் மர நடுகை நிகழ்வும் இடம்பெற்றது.

## கல்முனை மாநகர சபையில்...





**(பாறுக் ஷிஹான்)**

கல்முனை மாநகர சபை ஒழுங்கு செய்திருந்த, இலங்கையின் 77 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் கல்முனை மாநகர சபை ஆணையாளர் ஏ.ரி.எம்.ராபி தலைமையில் இடம்பெற்றன. இந்நிகழ்வில், அரசியல் பேரவை உறுப்பினரும் திகாமடுல்ல மாவட்ட பிரதேச அபிவிருத்திக் குழுத் தலைவரும் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.ஆதம்பாவா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

இதன் போது கல்முனை பிரதேச செயலாளர் ரி.எம். எம்.அன்சார், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். எம்.ஆசிக், கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரம்சீன் பக்கீர், அம்பாறை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரும் மாநகர சபையின் பிரதி ஆணையாளருமான ஏ.எஸ்.எம்.அஸீம், கல்முனை மாநகர பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச்.ஜௌஸி, கல்முனை சாய்ந்தமருது வர்த்தக சங்கங்களின் பிரமுகர்கள், மாநகர சபை உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# இலங்கையின் 77 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள்!

## கல்முனை பிரதேச செயலகத்தில்...





**(பாறுக் ஷிஹான்)**

நாட்டின் 77 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு கல்முனை பிரதேச செயலகம் ஏற்பாடு செய்த நிகழ்வுகள் இன்று (04) இடம்பெற்றன. கல்முனை பிரதேச செயலக பதில் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ரி.எம்.எம். அன்சார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், தேசியக்கொடி ஏற்றப்பட்டு தேசியக்கீதம் இசைக்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்கு பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ஏ.சி.எம் .பளீல், உதவி திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜௌபர், சமூர்த்தி தலைமை பீட சிரேஷ்ட முகாமையாளர் எ. ஆர். எம். சாலிஹ் உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

பிரதேச செயலக வளாகத்தில் மரம் நடுகையும் மேற்கொள்ளப்பட்டது.

## கற்பிட்டி பிரதேச செயலகத்தில்...





**(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)**

கற்பிட்டி பிரதேச செயலகத்தில் சுதந்திர தின நிகழ்வு கற்பிட்டி பிரதேச செயலாளர் மிலங்க பிரசாத் தலைமையில் இடம்பெற்றது. நாட்டின் தேசிய கொடியை ஏற்றி வைந்த கற்பிட்டி பிரதேச செயலாளர் சுதந்திர தினம் தொடர்பான சிறப்புரையாற்றினார். அவருடன் கிராம சேவையாளர்களின் உயர் அதிகாரி பீ.எம். பைனஸ் கலந்துகொண்டார்.

மேலும் கிராம உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் , பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## இரத்தினபுரி சீவலி மைதானத்தில்...



**(எஸ். இரவீந்திரன் )**

இலங்கையின் 77 ஆவது சுதந்திர தின நிகழ்வு இரத்தினபுரி சீவலி மைதானத்தில் சபரகமுவ மாகாண பிரதம செயலாளர் ஈ. கே. ஏ. சுனீதா மற்றும் இரத்தினபுரி மாவட்ட செயலாளர் கே ஜி.எஸ். நிசாந்த ஆகியோரின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியான சுற்றாடல் துறை அமைச்சர் டாக்டர் தம்பிக்க தேசிய கொடியை ஏற்றிவைத்தார்.

இரத்தினபுரி தமிழ் மகா வித்தியாலய மாணவர்கள் தமிழில் தேசிய கீதம் இசைத்தகர். அனைத்துஇன மாணவர்களின் நடன நிகழ்வும் இடம்பெற்றது.



# இலங்கையின் 77 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள்!

## மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில்...





(வவுணதீவு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் சுதந்திர தின நிகழ்வு புதிய மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்ரினா முரளிதரன் தலைமையில் இன்று (04) இடம் பெற்றது.

நாட்டின் தேசியக்கொடி ஏற்றி வைக்கப்பட்டதன் பின் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. தொடர்ந்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு ஏனைய நிகழ்வுகள் இடம்பெற்றன.



## சாய்ந்தமருது ஜும்ஆப் பள்ளிவாசலில்...



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 77 ஆவது சுதந்திர தின நிகழ்வு இன்று (04) செவ்வாய்க்கிழமை சாய்ந்தமருது, மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது, மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் பொறுப்பாளர் சபை உறுப்பினர்கள் மற்றும் மரைக்காயர்மார்கள் புடைசூழ தேசிய கொடி ஏற்றப்பட்டது.

பள்ளிவாசல் வளாகத்தில் மரநடுகை நிகழ்வும் இடம்பெற்றது. பள்ளிவாசலின் பிரதித்தலைவர் எம்.எம். எம். இஸ்மாயில் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், அரசியலமைப்புப் பேரவை உறுப்பினரும் அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களின் அபிவிருத்தி குழுத் தலைவரும் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ. ஆதம்பாவா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு தேசிய கொடியை ஏற்றி வைத்தார்.

இந்த நிகழ்வில், சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி வை.எல்.ஏ. ரஊப், பொலிஸ் பரிசோதகர் யூ.எல்.எம்.முபாரக், ஜும்ஆப் பள்ளிவாசலின் செயலாளர் எம்.எம் எம். றபீக், பொருளாளர் ஏ.ஏ.சலீம் உட்பட, பொறுப் பாளர் சபை உறுப்பினர்கள், கௌரவ மரைக்காயர்மார்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





# இலங்கையின் 77 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள்!

## மன்னார் மாவட்டச் செயலகத்தில்...





(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

'தேசிய மறுமலர்ச்சிக்காக அனைவரும் அணிதிரள்வோம்' எனும் தொனிப்பொருளில் இலங்கையின் 77 ஆவது சுதந்திர தினம் இன்று செவ்வாய்க்கிழமை(4) கொண்டாடப்படுகின்றது.

அதற்கு அமைவாக சுதந்திர தின நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை (4) காலை மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றன.

மன்னார் மாவட்ட அரச அதிபரால் தேசிய கொடி ஏற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து சமாதானப் புறா பறக்கவிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து நிகழ்வுகள் இடம் பெற்றன.

குறித்த நிகழ்வில் மாவட்டச் செயலக அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில்...





(எம்.ஏ.றமீஸ்)

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி தேசிய பாடசாலையில் ஏற்பாடு செய்யப்பட்ட இலங்கையின் 77 ஆவது சுதந்திர தின விழா நிகழ்வுகள் கல்லூரி அதிபர் ஏ.எல். நசீபா இக்பால் தலைமையில் பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றன.

அதிபர் தேசிய கொடி ஏற்றி வைத்ததைத் தொடர்ந்து மாணவர்களால் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

பாடசாலை வளாகத்தில் பயன்தரும் பல மரக் கன்றுகளும் இதன்போது நட்டு வைக்கப்பட்டன. இதுதவிர, நாட்டுக்காக உயிர் நீத்தவர்களுக்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது. இதேவேளை, அதிபரால் சுதந்திர தினம் தொடர்பான விஷேட உரையாற்றப்பட்டது.

இந்நிகழ்வின்போது பிரதி அதிபர் என்.எம்.சாலிஹ் உள்ளிட்ட ஆசிரியர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்

## கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தில்...



(வி.ரி.சகாதேவராஜா)

இலங்கையின் 77 ஆவது சுதந்திரதின நிகழ்வு கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தில் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் தலைமையில் இன்று நடைபெற்றது.

நிகழ்வின் நிறைவில் மரக் கன்றுகளும் நடப்பட்டன.









# சுதந்திர தினத்தை முன்னிட்டு மாணவருக்குக் கற்றல் உபகரணம்

(எம். எப். றிபாஸ்.)

சம்மாந்துறை கல்வி வலயத்துக்கு உட்பட்ட அல். ஹிக்மா முஸ்லிம் வித்தியாலயத்தில் அதிபர் எம். ரீ.அப்துல் சத்தார் தலைமையில் 77 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் இடம் பெற்றன.

இந்த நிகழ்வுக்கு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அமைப்பின் கிழக்கு மாகாண சட்டப் பணிப்பாளர் சட்டத்தரணி சீ. எம்.ஹலீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு தரம் ஒன்று மாணவர்களுக்கு பிரதம அதிதியால் புத்தகப் பைகளும், கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

பாடசாலை மேம்பாட்டு இணைப்பாளர் ஏ. எச். எம். சவாகிர், அல். கரீம் பவுண்டேஷன் செயலாளர் யூ. எல். எம். பாயீஸ் மற்றும் அகில இலங்கை இளஞ்ர் பேரவையின் தலைவர் றுமைஸ் முஹம்மட் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.




# சக வாழ்வு சைக்கிள் ஓட்டும் நிகழ்வு!

வடக்கு முதல் தெற்குவரை, பருத்தித் துறை முனையிலிருந்து தெய்வேந்திர முனைவரை சக வாழ்வு சைக்கிள் ஓட்டுதல் நிகழ்வானது நேற்று (03) காலை 6 ஆரம்பமாகியது.

2025 இற்கான இந்தச் செயற்றிட்டம் பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் அனுசரணையுடனும் நீதி அமைச்சின் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கசெயலகத்தின்அனுசரணையுடன் பிரதேச செயலர் ச.சத்தியசீலன் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

இருவர் இணைந்து ஓட்டும் குறித்த இரட்டைச் சைக்கிளானது ஒரு குடும்பத்தின் போக்குவரத்துக்கு இலகுவானதாக அமைந்துள்ளது. இந்த சைக்கிளோட்டத்தில் ஒரு தம்பதியினரும் விசேட அம்சமாக கண்பார்வையை இழந்த மாற்றுத் திறனாளி ஒருவரும் இந்த சைக்கிள் ஓட்டத்தில் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடக்கின் பருத்தித்துறை முனையில் இருந்து ஆரம்பித்த சைக்கிள் ஓட்டத்தில் பருத்தித்துறை பிரதேச செயலர் ச. சத்தியசீலன் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.







## சுதந்திர தினத்தை முன்னிட்டு மூதூரில் வைத்திய முகாம்!



(எச். எம். ஹலால்தீன் )

இலங்கையின் 77 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு மூதூரில்இலவச வைத்திய முகாம் இன்று காலை 8 மணிக்கு நடைபெற்றது.

மூதூர் பெரிய பள்ளிவாயல் முகைதீன் ஜும்மா பள்ளி வாயல் நிர்வாகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இலவச வைத்திய முகாமில் மூதூர், தோப்பூர் முதலான பிரதேசங் களைச் சேர்ந்த மக்கள் தமது நோய்க்கான வைத்திய சேவைகளை பெற்றுக் கொண்டனர்.

நீண்ட காலமாக வைத்திய சேவைகளைப் பெறாது இருந்த மக்கள் இதன் மூலம் பயனடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.





## இணுவில் கந்தசுவாமி ஆலயத்தில் தைப்பூச தினத்தன்று பெருமஞ்சம்!

(எஸ்.நிதர்ஷன்)

இணுவில் கந்தசுவாமி ஆலயத்தில் எதிர்வரும் 11 ஆம் திகதி தைப்பூசத் திருநாளை முன்னிட்டு உலகப் பெருமஞ்சம் வீதியுலா நடைபெறவுள்ளது.

தைப்பூச தினத்தன்று ஆலய வழிபாடுகள் தொடர்பிலான முன்னாயத்த கூட்டம் நேற்று திங்கட்கிழமை இணுவில் அறிவாலய மண்டபத்தில் நடைபெற்றது.

அதன் போது , தைப்பூச தினத்தை முன்னிட்டு ஆலய சூழலில் முன்னெடுக்க வேண்டிய நடைமுறைகள் தொடர்பில் துறை சார்ந்தவர்களின் பங்களிப்புடன் ஆலயத்தினர் ஆராய்ந்தனர்.

அதில், ஆலய சூழலில் விற்கப்படும் இனிப்பு பண்டங்கள் உள்ளிட்ட உணவு கையாளும் நிலையங்களின் சுகாதார நடைமுறைகளை பொது சுகாதார பரிசோதகர்கள் கண் காணித்தல், பக்தர்களின் நலன் கருத்தி பிரதேச சபையினரால் குடி தண்ணீர் வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தல், வீதி போக்குவரத்து ஒழுங்குகளை கையாளுதல், தற்காலிக கடைகளுக்கான நடைமுறைகள், அவற்றுக்கான இட ஒதுக்கீடுகள் உள்ளிட்டவை தொடர்பில் கலந்துரையாடி முடிவுகள் எட்டப்பட்டன.

அதனை தொடர்ந்து ஆலயத்தினர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது,

தைப்பூச தினத்தன்று உலக பெருமஞ்ச வீதியுலா இடம்பெறவுள்ளது. நாட்டின் பல பாகங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் வருகை தரும் பெரும்பாலா னவர்கள் மஞ்ச திருவிழாவில் கலந்துகொள்வர்.

தைப்பூச தினத்தன்று காலை 5.30 மணிக்கு அபிஷே கங்கள் இடம்பெற்று விசேட பூஜை வழிபாடுகள் ஆரம்பமாகும். தொடர்ந்து காலை மருதனார்மடம் பல்லப்ப வைரவர் ஆலயத்தில் இருந்து பாற்குட பவனி ஆரம்பிக்கும். அதற்கான பற்று சீட்டுகளை இணுவில் கந்தசுவாமி ஆலயத்தில் பக்தர்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

அதேவேளை, பாற்குட பவனியில் கலந்து கொள்ளவுள்ள பக்தர்களின் நலன் கருதி ஆலயத்தினரால் பால், செம்பு உள்ளிட்ட அனைத்து பொருள்களும் வழங்கப்படும். தேவை யானவர்கள் முன்னரே பதிவுகளை மேற்கொள்ளுங்கள். பாற்குட பவனியை தொடர்ந்து காவடி எடுத்தல் நிகழ்வு இடம்பெறும்.

அத்துடன், ஆலயத்துக்குச் சொந்தமான சங்குவேலியில் உள்ள வயலில் நெல் அறுவடை செய்து, அதனை எருது வண்டியில் ஆலயத்துக்கு பாரம்பரிய முறைப்படி எடுத்து வந்து, ஆலய முன்றலில் நெல் குத்தி, அரிசியாக்கி, அந்த அரிசியில் பொங்கல் நிகழ்வு இடம்பெறும்.

பொங்கல் நிகழ்வில் பக்தர்களும் கலந்து கொண்டு, ஆலய சூழலில் பொங்கல் வழிபாடுகளில் ஈடுபடலாம். பொங்கல் பொருள்களை எடுத்துவர சிரமம் எனில் ஆலயத்தில் பொங்கல் பொருள்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வசதிகளை செய்துள்ளோம். பொங்கல் பொருள்கள் தேவையானவர்களுக்கு முன்னரே பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

பொங்கல் நிகழ்வுகள் நடைபெறும் வேளையில் ஆலய மணிமண்டபத்தில் கலை நிகழ்வுகள் இடம்பெறும்.

இவற்றைத் தொடர்ந்து மாலை விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று, மாலை 6.30 மணிக்கு வசந்தமண்டபப் பூஜை இடம்பெற்று, ஆறுமுகசுவாமி, வள்ளி தெய்வானை சமேதரராய் உலகப் பெருமஞ்சத்தில் எழுந்தருளிப் பக்தர்களுக்கு அருட்காட்சி அளிப்பார்.

திருமஞ்சத்தில் முருகப்பெருமான் வீதியுலா வரும்வேளை வீதியில் பாரம்பரிய கலை கலாச்சார நிகழ்வுகள் இடம்பெறும் என்று ஆலயத்தினர் தெரிவித்துள்ளனர்.



# தூய்மையான இலங்கைத் திட்டத்தில் திருகோணமலை நிலாவெளி பிரதேசம்

(அபு அலா, எஸ்.எம்.முபீன்)

தூய்மையான இலங்கை திட்டத்தின் கீழ் திருகோணமலை – நிலாவெளி பிரதேசம் மற்றும் கடற்கரைகளை சுத்தம் செய்யும் நிகழ்வு நேற்று (03) இடம்பெற்றது.

நிலாவெளி உல்லாசப் பிரயாணிப்படகு மற்றும் சேவை கூட்டுறவுச் சங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட இந்த தூய்மையான இலங்கை திட்டத்தில் நிலாவெளி சுற்றுலா அபிவிருத்தி சங்கத்தில் செயலாளர் எஸ்.எம்.முபீன் மற்றும் சுற்றுலாப் படகு சங்கத்தின் தலைவர் அழகையா கோபால கிருஷ்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# வல்வெட்டித்துறை வைத்தீஸ்வர சுவாமி ஆலய மகா கும்பாபிஷேகம் திங்களன்று

வல்வெட்டித்துறை அருள்மிகு ஸ்ரீ வாலாம்பிகா தேவி சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன சப்தாதச குண்ட பட்ஷ உத்தம மஹா யாக பிரதிஸ்டா மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6.45 மணி 7.45 மணி வரையிலான சுப வேளையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கும்பாபிஷேக கிரியைகள் கடந்த 2 ஆம் திகதி ஞயிற்றுக்கிழமை ஆரம்பமாகியது. 8 ஆம் திகதி சனிக் கிழமை நண்பகல் 12 மணிவரை பக்தர்கள் எண்ணெய்காப்பு சாத்துதல் இடம்பெறும்.

வண்ணார் பண்ணை வைத்தீஸ்வரன் ஆலய பிரதமகுரு, சிவாகம ஞானசாகரம், ஈசான சிவாச்சாரியார், சிவப்பிரம்ம ஸ்ரீ சொ.இ.விக்னேஸ்வரக் குருக்கள் பிரதமகுருவாக இருந்து இந்தக் கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பார்.

கும்பாபிஷேகத்தை தொடர்ந்து மாலை 6 மணிக்கு திருக்கல்யாண உற்சவம் நடைபெற்று, சுவாமி வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருட்காட்சி வழங்குவார்.





# திராய்க்கேணி கிராமத்தில் முன்பள்ளிக் கட்டடம் திறப்பு!

(எம்.எப்.நவாஸ்)

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் உள்ளூராட்சி திணைக்கத்தின் பங்களிப்புடன் உலக வங்கி நிதி உதவியுடன் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் அனுசரணையின் கீழ் திராய்க்கேணி கிராமத்தில் (பாலமுனை) முன்பள்ளி பாலர்பாடசாலை கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

அட்டாளைச்சேனை பிரதேச சபைச் செயலாளர் இர்பான் தலைமையில் இந்தத் திறப்பு விழா இடம்பெற்றது.

அத்தோடு பிரதேச சபை உத்தியோத்தர்கள், முள்பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

# பழநியில் இருந்து திருப்பரங்குன்றம் புறப்பட்ட பா.ஜ.கவினர் 100 பேர் கைது

பழநியில் இருந்து ‘குன்றம் காக்க, குமரனைக் காக்க’ என்ற கோரிக்கையை முன் வைத்து, காவடிகளுடன் பாதயாத்திரையாக புறப்பட்ட பாஜக. வினர் 100 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் மலையிலுள்ள சிக்கந்தர் தர்காவில் ஆடு, கோழிகளை பலியிட இஸ்லாமிய அமைப்புகள் திட்டமிட்ட நிலையில், இந்து முன்னணி போன்ற அமைப்பினர் எதிர்ப்பு தெரிவித்து, பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டனர். இதைத் தொடர்ந்து, இன்று இந்து முன்னணி உள்ளிட்ட சில இந்து அமைப்பினர் அறப்போராட்டத்துக்கு அழைப்பை விடுத்தனர்.



இதன்படி, ‘குன்றம் காக்க, குமரனை காக்க’ என்ற கோரிக்கையுடன் 3 ஆம் படையில் இருந்து முதல் படையை நோக்கி, இன்று செவ்வாய்கிழமை காலை திண்டுக்கல் மேற்கு மாவட்ட பா.ஜ.க. சார்பில் கட்சி அலுவலகத்தில் இருந்து ஆன்மிகப் பிரிவு மாவட்ட தலைவர் சூரியமூர்த்தி தலைமையில் காவடிகளுடன் பாதயாத்திரை புறப்பட்டனர். அவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தி, மதுரையில் 144 தடை உத்தரவு உள்ளதால் வெளி நகர்கள் அங்கு செல்ல அனுமதி இல்லை.

தடையை மீறி செல்ல முயன்றால் கைது செய்யப்படும் என்று கூறினர். அதனை மீறி, திருப்பரங்குன்றம் புறப்பட்ட 10 பெண்கள் உட்பட பா.ஜ.கவினர் 100 பேரை பொலிஸார் கைது செய்து, தனியார் மண்டபத்தில் அடைத்தனர்.



# சிறுபான்மையினர் மீதான தாக்குதல்கள் அதிகரிப்பு!

### கனிமொழி குற்றச்சாட்டு

நாட்டில் சிறுபான்மையினருக்கு பாதுகாப்பான சூழலை அளிக்க மத்திய அரசு தவறிவிட்டது என கனிமொழி குற்றம் சுமத்தியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாட்டில் சிறுபான்மையினருக்கு பாதுகாப்பான சூழலை அளிக்க மத்திய அரசு முற்றிலும் தவறிவிட்டது.

பா.ஜனதா ஆளும் மாநிலங்களில், சிறுபான்மையினர் மீதான தாக்குதல்கள் அதிகரித்துள்ளது. உத்தர பிரதேசத்தில் கிறிஸ்தவ தேவாலயங்கள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. சிறுபான்மையினர் குறிவைத்துத் தாக்கப்படுகிறார்கள்.” என்றார்.

# ஐஸ்வர்யா ராயின் மகள் வழக்கு தாக்கல் செய்தார்

நடிகை ஐஸ்வர்யா ராயின் மகள் ‘ஆராத்யா பச்சன்’ தாக்கல் செய்த வழக்கில் கூகுள் மற்றும் இணைய தளங்கள் பதிலளிக்க வேண்டுமென டில்லி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஊடகங்களில் தன்னைப் பற்றி தவறான தகவல்கள் இடம் பெறுவது தொடர்பாக ஆராத்யா பச்சன் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்நிலையில், இந்த மனு தொடர்பாக கூகுள், பாலிவுட் டைம் உள்ளிட்ட இணையதளங்கள் பதிலளிக்க வேண்டுமென டில்லி உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.



# இந்திய - இலங்கை கூட்டுக் குழுவை அமைக்க வேண்டும்: வே.நாராயணசாமி

மீனவர்களின் பிரச்சினைக்கு இந்திய-இலங்கை கூட்டுக் குழுவொன்றை அமைத்து விரைவில் தீர்வுகாண வேண்டும் என இந்தியாவின் புதுச்சேரி மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் வே.நாராயணசாமி வலியுறுத்தியுள்ளார்.

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தொடர்ந்தும் கைது செய்யப்படுவதுடன், தாக்குதலுக்கும் இலக்காகிவருகின்றனர் என வே.நாராயணசாமி குற்றம் சுமத்தியுள்ளார்.


அத்துடன், தமிழக மீனவர்களின் படகுகளும் பறிமுதல் செய்யப்படுகின்றன என வே.நாராயணசாமி சுட்டிக்காட்டியுள்ளார். அண்மையில், இலங்கை கடற்படையின் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த மீனவர்களுக்கு இலங்கையில் முறையான சிகிச்சை அளிக்கப்படவில்லை எனவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.



இந்த விடயம் தொடர்பில் இந்திய மத்திய அரசாங்கத்துக்கு கடிதம் அனுப்பியுள்ளதுடன், இலங்கையில் உள்ள இந்திய இராஜதந்திரியுடனும் தாம் கலந்துரையாடியுள்ளதாகவும் புதுச்சேரி மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக தாம் கலந்துரையாடல்களை முன்னெடுத்த பின்னரே மத்திய அரசாங்கம் இந்திய மீனவர்கள் மீதான துப்பாக்கிச் சூட்டுக்கு கண்டனம் தெரிவித்ததாகவும் இந்தியாவின் புதுச்சேரி மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் வே.நாராயணசாமி குற்றம் சுமத்தியுள்ளார்.

# உலகளவில் புகைபிடிக்காதவர்களிடையே நுரையீரல் புற்றுநோய் விகிதம் உயர்வு



உலகளவில் புகைபிடிக்காதவர்களிடையே நுரையீரல் புற்றுநோய் விகிதம் அதிகரித்து வருவதாக ஒரு புதிய ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது.

இங்கிலாந்தில் உள்ள லான்செட் சுவாச மருத்துவ இதழ் நடத்திய ஆய்வில், புகைபிடிக்காதவர்களிடையே அடினோ கார்சினோமா எனப்படும் ஒரு வகை நுரையீரல் புற்றுநோய் அதிகமாகக் காணப்படுகிறது என்பது தெரியவந்துள்ளது.

அந்தப் புற்றுநோய் நிலையில் உள்ள நோயாளிகளின் எண்ணிக்கை 53 சதவீதத்திலிருந்து 70 சதவீதமாக அதிகரித்துள்ளது.

இந்த நோய் பெண்கள் மற்றும் ஆசிய மக்களிடையே அதிகமாகக் காணப்படுவதாகவும் வெளிநாட்டு ஊடக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

# அமெரிக்காவின் வரி விதிப்புக்கு சீனாவின் விரைவான பதிலடி!







சீனப் பொருள்கள் மீதான புதிய அமெரிக்க வரிகளுக்கு விரைவான பதிலடியாக, பீஜிங் இன்று செவ்வாயன்று அமெரிக்க இறக்குமதிகள் மீதான வரிகளை விதித்தது.

இதன் மூலம், உலகின் முதல் இரண்டு பொருளாதாரங்களுக்கு இடையே வர்த்தகப் போரை இரு நாடுகளும் மீண்டும் புதுப்பித்தன.

ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் கூடுதல் 10 வீத வரி அமெரிக்காவிற்குள் அனைத்து சீன இறக்குமதிகள் மீது இன்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 12:01 (0501 GMT) மணிக்கு அமுலுக்கு வந்தது.

இது அமுலுக்கு வந்த சில நிமிடங்களில் சீனாவின் நிதி அமைச்சகம், அமெரிக்க நிலக்கரி, திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயுக்கு (LNG) 15 வீதம் மற்றும் மசகு எண்ணெய், விவசாய உப கரணங்கள் மற்றும் மேலும் சில பொருட்களுக்கு 10 வீதம் வரி விதிக்கப்படும் என்று கூறியது.

அமெரிக்க ஏற்றுமதிக்கான புதிய கட்டணங்கள் பெப்ரவரி 10 ஆம் திகதி தொடங்கும் என்றும் சீனாவின் நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், அமெரிக்காவின் கூகுள் நிறுவனத்தின் (GOOGL.O)ஏக போகத்திற்கு எதிரான விசாரணையைத் தொடங்குவதாகவும் சீனா கூறியது.

இதனிடையே, தேசிய பாதுகாப்பு நலன்களைப் பாதுகாப்பதற்காக டங்ஸ்டன், டெல்லூரியம், ருத்தேனியம் மற்றும் மாலிப்டினம் மற்றும் ருத்தேனியம் ஆகிய தனிமப் பொருள்களின் மீது ஏற்றுமதி கட்டுப்பாடுகளை விதிப்பதாக சீனாவின் வர்த்தக அமைச்சகமும் அதன் சுங்க நிர்வாகமும் தனித்தனியாக தெரிவித்தன.

தூய்மையான ஆற்றல் மாற்றத்திற்கு முக்கியமான இத்தகைய அரிய தனிமங்களின் உலகளாவிய விநியோகத்தின் பெரும்பகுதியை சீனா கட்டுப்படுத்துகிறது.

ட்ரம்ப் திங்களன்று மெக்சிகோ மற்றும் கனடா மீதான தனது அச்சுறுத்தலான 25 வீத வரிகளை கடைசி நிமிடத்தில் நிறுத்தி வைத்தார்.

இரு அண்டை நாடுகளுடனான எல்லை மற்றும் குற்ற அமலாக்கத்திற்கான சலுகைகளுக்கு ஈடாக 30 நாள் இடைநிறுத்தத்திற்கு ஒப்புக் கொண்டார்.

ஆனால், சீனாவிற்கு அத்தகைய வரி நிவாரணம் எதனையும் அவர் அறிவிக்கவில்லை.

மேலும், இந்த வாரத்தின் பிற்பகுதி வரை ட்ரம்ப் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்குடன் பேச மாட்டார் என்று வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார்.





# கிரேக்க தேசத்தில் நில அதிர்வு; பாடசாலைகளுக்கு விடுமுறை!

ஐரோப்பிய நாடான கிரேக்க தேசத்தில் உள்ள சாண்டோரினி தீவில் கடலுக்கு அடியில் கடந்த 3 நாள்களில் 200 இற்கும் மேற்பட்ட முறை நில அதிர்வுகள் பதிவாகியுள்ளன என வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனைத் தொடர்ந்து சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

இந்த நிலையில், அங்கு வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற அறிவுறுத்தப்பட்டனர்.

இதற்கிடையே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, சாண்டோரினி தீவில் உள்ள பாடசாலைகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நில அதிர்வால் ஏற்படும் ஆபத்தைக் குறைக்க முறையான வழிகாட்டுதல்களை கடைப்பிடிக்குமாறு மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பக்கங்கள் 03

# கனடா முரசு

திங்கட்கிழமை 03/02/2025

## ஸ்காப்ரோ துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் காயம்

கனடாவின் ஸ்காப்ரோ பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

சுமார் 20 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவர் இந்த 03▶





# கனடாவின் பொருள்கள் தேவை இல்லை: ட்ரம்ப்

“கனடாவில் உற்பத்தி செய்யப்படும் எந்தப் பொருள்களும் எங்களுக்குத் தேவையில்லை. எங்களிடம் ஆற்றல் உள்ளது.”

- இவ்வாறு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாக கடந்த ஜனவரி மாதம் 20ஆம் திகதி பதவியேற்ற குடியரசு கட்சியின் தலைவர் டொனால்ட் ட்ரம்ப் பல்வேறு அதிரடி அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறார்.

குறிப்பாக அண்மையில் கனடா, மெக்சிகோ ஆகிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 25 சதவீதமும், சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 10 சதவீதமும் வரி விதித்து ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார். 02▶

# அமெரிக்கப் பொருள்களை புறக்கணிக்கும் கனடியர்கள்

அமெரிக்க பொருள்களை புறக்கணிக்க போவதாக சில கனடியர்கள் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கனடாவின் ஏற்றுமதிகள் மீது வரி விதித்திருந்தார்.

ஏற்றுமதி பொருள்கள் மீது 25 வீத வரி விதிக்கப்பட்டிருந்தது. இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்பை வெளியிடும் வகையில் அமெரிக்க பண்டங்களை நிராகரிக்க போவதாக கனடியர்கள் தெரிவித்துள்ளனர்.

கனடாவின் முன்னணி ஊடகம் ஒன்றுக்கு கருத்துக்களை வெளியிட்ட போது இவ்வாறு கனடிய பிரஜைகள் தெரிவித்துள்ளனர்.

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை கொள்வனவு செய்வதற்கு முன்னுரிமை வழங்கப் போவதாக குறித்த கனடியர்கள் தெரிவித்துள்ளனர்.



கனடாவில் அமெரிக்க எதிர்ப்பு அலை முன்னொரு போதும் இல்லாத அளவிற்கு வலுப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



# கனடா மீதான வரி விதிப்பை இடைநிறுத்தினார் ட்ரம்ப்

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மெக்சிகோ மற்றும் கனடா மீதான தனது கடுமையான கட்டண அச்சுறுத்தலை இடைநிறுத்தியுள்ளார்.

இரு அண்டை நாடுகளுடனான எல்லை மற்றும் குற்ற அமலாக்கத்திற்கான சலுகைகளுக்கு ஈடாக வரி விதிப்பினை 30 நாள்களுக்கு இடைநிறுத்துவதற்கு அவர் ஒப்புக்கொண்டார்.

எனினும், சீனா மீதான அமெரிக்க வரிகள் இன்னும் சில மணிநேரங்களில் அமலுக்கு வர உள்ளன.

கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மற்றும் மெக்சிகோ ஜனாதிபதி கிளாடியா ஷீன்பாம் இருவரும் குடியேற்றம் மற்றும் போதைப்பொருள் கடத்தலைத் தடுக்க ட்ரம்பின் கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் எல்லை அமுலாக்க முயற்சிகளை வலுப்படுத்த ஒப்புக்கொண்டதாக தெரிவித்தனர்.

இதனால், இன்று செவ்வாய்கிழமை முதல் நடைமுறைக்கு வரவிருந்த 25 வீத வரி விதிப்பானது அடுத்த 30 நாள்களுக்கு ட்ரம்பின் உத்தரவுக்கு அமைவாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவுடனான அதன் எல்லையில் புதிய தொழில்நுட்பம் மற்றும் பணியாளர்களை நிலைநிறுத்தவும், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள், போதைப்பொருள் கடத்தல் மற்றும் பணமோசடி ஆகியவற்றை எதிர்த்து கூட்டு முயற்சிகளைத் தொடங்கவும் கனடா ஒப்புக்கொண்டது.

மெக்ஸிகோ தனது வடக்கு எல்லையை 10,000 தேசிய காவலர் உறுப்பினர்களுடன் வலுப்படுத்த ஒப்புக்கொண்டது, இது சட்டவிரோத இடம்பெயர்வு மற்றும் போதைப்பொருள் ஓட்டத்தைத் தடுக்கிறது.

எவ்வாறெனினும் இன்று செவ்வாய்க்கிழமை அந் நாட்டு நேரப்படி 12:01 அதிகாலை ((0501 GMT) ) இல் தொடங்குவதற்கு தயாராக இருக்கும் 10 வீத முழுவதுமான கட்டணங்களை எதிர்கொள்ளும் சீனாவிற்கு அத்தகைய சலுகைகள் எதனையும் அமெரிக்க அரசாங்கம் அறிவிக்கவில்லை.

இந்த வாரம் வரை சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்குடன் ட்ரம்ப் பேசமாட்டார் என வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், பீஜிங் மீதான வரியை மேலும் அதிகரிக்கலாம் என்றும் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

மேலும், வரி விதிப்பில் 27 நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியம் தனது அடுத்த இலக்காக இருக்கும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடந்த ஞாயிற்றுக் கிழமை கூறினார்.

ஆனால், ஐரோப்பிய ஒன்றியம் மீதான வரி விதிப்பு எப்போது என்று அவர் கூறவில்லை.

2020 இல் ஐரோப்பிய ஒன்றியத்தை விட்டு வெளியேறிய பிரிட்டன், கட்டணங்களைத் தவிர்க்கலாம் என்றும் ட்ரம்ப் சுட்டிக்காட்டினார்.

பிரஸ்ஸல்ஸில் நடந்த முறைசாரா உச்சிமாநாட்டில் ஐரோப்பிய ஒன்றிய தலைவர்கள், அமெரிக்கா கட்டணங்களை விதித்தால், ஐரோப்பா எதிர்த்துப் போராடத் தயாராக இருக்கும் என்று கூறினர்.

எனினும், அவர்கள் ட்ரம்புடனான பேச்சுவார்த்தைக்கும் அழைப்பு விடுத்தனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் மிகப் பெரிய வர்த்தக மற்றும் முதலீட்டு பங்காளியாக அமெரிக்கா உள்ளது.

இதனிடையே ட்ரம்ப் வார இறுதியில் வெள்ளை மாளிகையில் ஆற்றி உரையில், தனது கட்டணங்கள் அமெரிக்க நுகர்வோருக்கு சில குறுகிய கால வலியை ஏற்படுத்தக்கூடும் என்று ஒப்புக்கொண்டார்.

ஆனால் குடியேற்றம் மற்றும் போதைப்பொருள் கடத்தலைக் கட்டுப்படுத்தவும் உள்நாட்டுத் தொழில்களை ஊக்குவிக்கவும் அவை தேவை என்றும் வலியுறுத்தினார்.

ஏனைய ஆய்வாளர்கள் இந்த கட்டணங்கள் கனடா மற்றும் மெக்சிகோவை மந்தநிலையில் தள்ளலாம் மற்றும் 'தேக்கநிலையை' தூண்டலாம் - அதிக பணவீக்கம், தேக்கமான வளர்ச்சி மற்றும் உயர்ந்த வேலையின்மையை ஏற்படுத்தலாம் என்று எச்சரித்தும் உள்ளனர்.

## கனடாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில், அமெரிக்கா விதித்த இறக்குமதி வரிக்கு பதிலடி கொடுக்கும் வகையில் கனடாவும் அமெரிக்க உற்பத்திகளுக்கு அதிகளவான வரியனை விதித்துள்ளது. அதன்படி, அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 25 சதவீதம் வரி விதிக்கப்படும் என்று கனடா அறிவித்துள்ளது.

இந்நிலையில் கனடாவின் அறிவிப்பால் ஆத்திரமடைந்துள்ள ட்ரம்ப், "கனடாவில் உற்பத்தி செய்யப்படும் எந்தப் பொருள்களும் எங்களுக்குத் தேவையில்லை. எங்களிடம் ஆற்றல் உள்ளது. எங்களால் சொந்தமாக உருவாக்க முடியும்." என்று தெரிவித்துள்ளார்.

அத்துடன், "நாட்டு மக்களுக்கு தேவைப் படும் அளவை விட அதிகமான அளவு எங்களிடம் பொருட்கள் உள்ளன. கனடாவை அமெரிக்காவின் 51ஆவது மாகாணமாக உருவாக்குவோம். அதன் மூலம் கனடா மக்களுக்கு மிக குறைந்த வரி மற்றும் இராணுவ பாதுகாப்புகள் ஆகியவற்றை உருவாக்குவோம்" என்றும் ட்ரம்ப் உறுதியளித்துள்ளார்.





# அமெரிக்க இறக்குமதிகளுக்கு 25 சதவீத வரி விதித்த கனடா

அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு கனடா 25 சதவீத வரி விதித்தது.

அமெரிக்கா விதித்த இறக்குமதி வரிக்கு பதிலடி கொடுக்கும் வகையில் கனடா வரி விதிப்பை மேற்கொண்டது.

அதன்படி, அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு 25 சதவீதம் வரி விதிக்கப்படும் என்று கனடா அறிவித்திருந்தது.

அமெரிக்காவின் வர்த்தக நடவடிக்கைக்கு கனடா பதிலடி கொடுக்கும் வகையில் 155 பில்லியன் கனேடிய டொலர் மதிப்பிலான அமெரிக்க இறக்குமதி பொருள்களுக்கு 25 சதவிகிதம் வரி விதிப்பதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அறிவித்திருந்தார்.

இதன் முதல் சுற்றாக 30 பில்லியன் கனேடிய டொலர் மதிப்புள்ள அமெரிக்க பொருள்களுக்கு வரி விதிப்பானது இன்று செவ்வாய்கிழமை முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

அதைத் தொடர்ந்து மூன்று வாரங்களில் 125 பில்லியன் கனேடிய டொலர் மதிப்புள்ள பொருள்கள் மீது இந்த புதிய வரி விதிப்பு நடைமுறைப்படுத்தப்படும் என்று ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

இந்த புதிய வரி விதிப்பானது அன்றாடப் பொருள்களான, அமெரிக்க பீர், வையின், பழங்கள், காய்கறிகள், நுகர்வோர் சாதனங்கள், மரக்கட்டை, பிளாஸ்டிக் உள்ளிட்ட பொருள்களுக்கு பொருந்தும் என ஜஸ்டின் ட்ரூடோ கூறியிருந்தார்.

# பாடசாலை மீது துப்பாக்கிச் சூடு மிரட்டல் விடுத்த சிறுவன் கைது




ஒஷாவாவில் பாடசாலை மீது துப்பாக்கிச் சூடு நடத்துவதாக அச்சுறுத்தல் விடுத்த 13 வயதான சிறுவனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

டர்ஹம் பிராந்திய பொலிஸ் அதிகாரிகள் இந்த சிறுவனை கைது செய்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலையின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட போவதாக சமூக ஊடகங்கள் மூலம் மேற்படி சிறுவன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பியே எலியோட் ட்ரூடோ பொது பாடசாலையில் இவ்வாறு துப்பாக்கிச் சூடு நடத்துவதாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பாடசாலைகளின் பாதுகாப்பினை உறுதி செய்வதில் கூடுதல் கவனம் செலுத்துவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## ஸ்காப்ரோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் காயமடைந்துள்ளார்.

பிரிச்மவுன்ட் மற்றும் கம்ஸ்டாக் வீதிகளுக்கு அருகாமையில் நேற்று அதிகாலை வேளையில் இந்த துப்பாக்கி சுட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் படுகாயம் அடைந்த நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் எவரும் இதுவரையில் கைது செய்யப்படவில்லை.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஏதேனும் தகவல்




கள் கிடைத்தால் பொலிஸாருக்கு அறிவிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.